# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.ST.C.362/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | எ.சா.2 |
| Name | : | .எம்.கௌசல்யா |
| Father’s Name | : | க.பெ.பி.கிஷோர்குமார். |
| Village | : | . ஓசூர் |
| Taluk | : | .வந்தவாசி |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | .28 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 20.02.2026.

<u>முதல் விசாரணை</u>

. நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். மருந்தகம் கடை வைத்துள்ளேன். 21.04.2021ம் தேதி மருந்து கட்டுப்பாட்டு ஆய்வாளர் எனது மருந்தகத்திற்கு ஆய்விற்கு வந்தார். அப்போது மருந்தாலுனர் ஏன் இல்லை என்று என்னை கேட்டார். அதற்கு நான் மருந்து டெலிவரி செய்ய வெளியில் சென்றிருப்பதாக கூறினேன். சிறிது நேரம் கழித்து மருந்தாளுனர் மருந்தகத்திற்கு வந்துவிட்டார். அதனால் ஆய்வாளர் அதனை பெரிதுபடுத்தவில்லை. ஆய்வாளர் மருந்துகளின் லெட்ஜர் புத்தகத்தை ஆய்வு செய்தார் அப்போது கொரோணா நோய்தொற்று காலம் என்பதால் நாங்கள் சரிவர லெட்ஜர் புத்தகத்தை பராமரிக்கவில்லை. அதன் பின்னர் ஆய்வாளர் என்னிடம் நான்கு ஏ4 தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு சென்றார்.

நான் சொல்வதுபோல் நீதிமன்றத்தில் சொல்லவேண்டும் என்றும் இல்லையென்றால் எனது லைசன்சை ரத்து செய்துவிடுவதாக கூறினார். அதன் பின்னர் அங்கிருந்து ஆய்வாள் சென்றுவிட்டார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு மருந்து சட்டம் மற்றும் விதிகள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். கொரோணா கால கட்டத்தில் அரசு மருந்தகங்களில் மருந்து லெட்ஜர் புத்தகங்களை பராமரிக்க தேவையில்லை என்று விதி எதுவும் தளர்த்தவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் எங்கள் மருந்தகத்தில் இருந்து கைபற்றிய மருந்துலெட்ஜர் புத்தகத்தில் மருந்து ஆளுநரின் கையெழுத்தும் பரிந்துரை செய்த மருத்துவரின் பெயரும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் நான் சொன்ன குற்ற சாட்டுகளை பொறுத்து இன்றுதான் முதல் முறையாக சொல்கிறேன் என்றால் சரிதான். அது குறித்து எந்த துறைக்கும் கடிதம் மூலம் முறையீடு செய்தேனா என்றால் இல்லை. நான் தற்போது முதல் விசாரணையில் கூறியுள்ள குற்றச்சாட்டுகளை வழக்கில் இருந்து என்னை காப்பாற்றிக்கொள்வதற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.

//உண்மை நகல்//

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.122/2014 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | .பன்னீர் செல்வம், டாஸ்மார்க் விற்பனையாளர், திருவண்ணாமலை. |
| Father’s Name | : | த.பெ.பழனி, |
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | .47 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 23.02.2026.

**எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் வன்னிய நகரம் கடை எண்.9460 என்கிற அரசு மதுபான கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஏம்பலம் கிராமத்தில் உள்ள அரசு மதுபான கடையில் விற்பனையாளராக

பணியில் இருந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த புகாரை நான்தான் கொடுத்தேன் அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். அன்றைய தினம் தேதி ஞாபகம் இல்லை. நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரி பாலு என்பவர் இரவு 9.00 மணி அளவில் கடைமூடும் நேரத்தில் கடன் கேட்டு கொடுக்கமுடியாது என்று சொன்னதால் அவர் என்னை அடித்தார். அதனால் இருவருக்கும் கைகளப்பு ஏற்பட்டது அதனால் நான் மேற்படி புகார் கொடுத்தேன் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

நடந்ததாக சொல்லப்படும் சம்பவமானது நடைபெற்ற சமயம் இருட்டு நேரம் என்றால் சரிதான். கடைக்கு வெளிபுறம் மின்விலக்கு இல்லையென்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் ஒரு நான்கு நபர்கள் இருந்திருப்பார்கள். மேற்படி நபர்களில் யார் பிரச்சனை செய்தார்கள் என்று என்னால் சரியாக கூறமுடியுமா என்றால் கூறமுடியாது. அந்த சமயத்தில் எதிரியும் அங்கிருந்ததால் சந்தேகத்தின்பேரில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல எதிரி இவ்வழக்கில் குற்றவாளி இல்லை என்று சொன்னால் சரியல்ல.